[1973 நவம்பர் 23

தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டு விற்பனையைப் பெருக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

1. 10--11--1972 ஆம் நாள் நடைபெற்ற 49-வது குலுக்கலிலிருந்து, தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டத்தின் பரிசுத் தொகை அமைப்பைத் திருத்தியமைத்து ஆணைகள் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஆறுதல் பரிசுகள் உட்பட சாதாரண பரிசுகளின் மொத்த எண்ணிக்கை 1066-லிருந்து 1684 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பரிசு பெறும் எண்ணுக்கு முன்னும் பின்னும் உள்ள எண்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

முதல் பரிசுக்காக : $2 \times 1,500 = 3,000$

இரண்டாவது பரிசுக்காக : $4 \times 500 = 2,000$

2. தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம் குறித்த வர்த்தக விளம்பரங்கள் அகில இந்திய வானொலி மூலம் செய்யப்படுகின்றன.

3. தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம் பற்றி, ரூ. 57,250 செலவில், 500 அடி நீளத்தில் வண்ணச் செய்தித் திரைப்படம் ஒன்றை அரசு எடுக்கத் தீர்மானித்துள்ளது.

4. மைசூர், ஹரியானா, பஞ்சாப் ஆகிய அரசுகளுடன் பரிசுச் சீட்டு விற்பனை குறித்து பரஸ்பர ஏற்பாடுகளை மீண்டும் செயலுக்குக் கொண்டு வர அரசு கருதியுள்ளது.

இணைப்பு V

[269 ஆம் பக்கத்தில் 48-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

முன்பு சில ஆராய்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. தற்போது சில செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் வருமாறு :—

(1) இந்த மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், உவர்த் தன்மையால் பாதிக்கப்பட்டுள்ள நிலங்களின் தன்மை, சிக்கனமான முறைகளில் அவற்றைப் பயன்படுத்தும் முறை அவற்றை விளை நிலமாக்கல் ஆகியன இந்த ஆராய்ச்சியின் நோக்கமாகும்.

1973 நவம்பர் 23]

(2) கோயம்புத்தூர், வேளாண்மை பல்கலைக் கழகத்தில் தொடர்பான ஆராய்ச்சித் திட்டம் ஒன்று செயலில் உள்ளது.

(3) தேசிய செய்முறை விளக்க சோதனைகளின் கீழ், திருச்சி, மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், வடாற்காடு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும், களர்த்தன்மை, உவர்த்தன்மை ஆகியவைகளால் பாதிக்கப் பட்ட ஒரு ஏக்கர் நிலத்தை சோதனைக்கு எடுத்து, பண்படுத்தி, விளை நில மாக்குவது பற்றி விளக்கிக் காட்டப்படுகின்றன.

(4) முன்பு உவர், களர் நிலங்களைப் பண்படுத்த தனி ஆராய்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இவற்றில் ஒன்று 1959 முதல் 1963 வரை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவி கொண்டு இராமநாத புரம், திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களிலும் எஞ்சிய திட்டங்கள் பெரும்பகுதி நிலங்களை (சுமார் 300 ஏக்கர்) பண்படுத்துவதற்கான முன்னோடித் திட்டமாகத் தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்திலும் செயல்படுத்தப் பட்டன. இவற்றைத் தவிர, கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மண் அறிவியல் துறையைச் சேர்ந்த பட்ட மேற்படிப்பு மாணவர்கள் சில அடிப்படை ஆராய்ச்சிகளையும் நடத்தினர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS